March - 2013

M 13

No. of Printed Pages : 7

**3001**

பதிவு எண் | | | | | | |

## தமிழ் - முதல் தாள்

## Language — Part A — TAMIL — Paper I

2137941

**(செய்யுள், உரைநடை)**

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா VI க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

### பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : **6x1=6**

**1.** மாணிக்கவாசகர் பிறந்த ஊர்

(அ) திருப்பெருந்துறை

(ஆ) திருவாதவூர்

(இ) திருநின்றவூர்

2. இளங்கோவடிகள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்

(அ) சேர

(ஆ) சோழ

(இ) பாண்டிய

[ திருப்புக

3. நற்றிணையைத் தொகுப்பித்தவர்

(அ) பன்னாடு தந்த மாறன் வழுதி

(ஆ) உக்கிரப் பெரு வழுதி

(இ) இளம் பெரு வழுதி

4. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று

(அ) வாக்குரிமை இல்லாமை

(ஆ) சொத்துரிமை இல்லாமை

(இ) பேச்சுரிமை இல்லாமை

5. 'பண்ணொடு தமிழொப்பாய்' எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல்

(அ) திருவாசகம்

(ஆ) திருக்குறள்

(இ) தேவாரம்

6. உறுமிடத் துதவா உவர்நிலம் என்னும் வரிகள் இடம்பெறும் நூல்

(அ) புறநானூறு

(ஆ) அகநானூறு

(இ) கலித்தொகை

## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக. **6x1=6**

7. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் ______.

8. இடிப்பாரை இல்லாத ________ மன்னன் கெடுப்பார்
இலானும் கெடும்

9. சீறாப்புராணத்தை இயற்றியவர் ________.

10. தமிழ் மிகவும் பண்பட்டமொழி எனக் கூறிய மொழியியல் அறிஞர் ________.

11. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை ________.

12. கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் ________.

## பகுதி - 3

பொருத்துக : **4x1=4**

13. நாளிகேரம் - குடை

14. நாவாய் - ஓய்வெடுத்தல்

15. கவிகை - படகு

16. இளைப்பாறுதல் - தென்னை

## பகுதி - 4

விடைக்கேற்ற வினா அமைக்க : **4x1=4**

17. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்.

18. காந்தியடிகள் பகவத்கீதையைப் படித்ததன் மூலம் மனவுறுதியைப் பெற்றார்.

19. எல்லா உயிர்களையும் தம்முயிராய்க் கருதித் தொண்டு செய்பவர் உள்ளத்தில் தான் இறைவன் நடம் புரிவான்.

20. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி ஆகும்.

[ திருப்புக

## பிரிவு - II
(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **5x2=10**

21. பலகற்றும் கல்லார் அறிவிலார் - யார் ?

22. பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை ?

23. கையுறைப் பொருளாகக் குகன் கொண்டு சென்றன எவை ? யாருக்கு ?

24. அப்பூதியடிகள் எவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயரிட்டார் ?

25. சிவபெருமான் எத்தன்மையன் என நாவுக்கரசர் கூறுகிறார் ?

26. வயலின் வரப்புகளாகக் கூறப்படுவன யாவை ?

27. பண்பு எனப்படுவது யாது ?

### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : **5x2=10**

28. தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.

29. கல்விப் படங்கள் வாயிலாக நாம் அறிவன யாவை ?

30. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை ?

31. நீவிர் அறிந்த நான்கு சித்தர்களின் பெயர்களை எழுதுக.

32. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது ?

33. இராமலிங்கர் எங்கு எப்போது பிறந்தார் ?

34. பட்டப் படிப்புகளில் எவையேனும் நான்கனை எழுதுக.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3x4=12

35. வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான் ?

36. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை ?

37. தலைவனுக்குத் தோழி கூறும் செய்திகளை நற்றிணைப் பாடல் வழி தொகுத்து எழுதுக.

38. சீறாப்புராணம் - குறிப்பு எழுதுக.

39. சாதனைப் பூக்கள் என்று எவற்றை சாலையார் சுட்டுகிறார் ?

### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3x4=12

40. பெண்ணுரிமையை விளக்குக.

41. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை ?

42. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும் ?

43. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

44. மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

[ திருப்புக

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லிஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி

(i) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ?

(ii) இப்பாடலில் வரும் புலவர்களின் பெயர்களை எழுதுக.

(iii) போலிப்புலவர்களின் தலையில் குட்டுபவர் யார் ?

(iv) சீத்தையர் - பொருள் தருக.

(v) இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.

46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

சங்க காலத்தில் ஒரு முல்லைக் கொடியின் துயர் நீக்க, பாரிவள்ளல் தன் தேரையே ஈந்தார். பல நூற்றாண்டுகள் கழித்துப் பாரி வள்ளலைப்போல வள்ளலார், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பயிர் வாடத் தாம் வாடினார். வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்தவரையும், நீடிய பிணியால் வருந்துவோரையும், ஈடில் மானிகளாய், ஏழைகளாய் நெஞ்சு இளைத்தோரையும் கண்டு வருத்தத்தால் உயிர் இளைத்தார் வள்ளற்பெருமான். இவ்வருத்தம் நீங்கவே, வடலூரில் சத்திய தருமசாலையை நிறுவிச் சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார். அங்கு, அவர் ஏற்றி வைத்த அடுப்பின் கனல், இன்றும் பல்லோர் பசிப்பிணியைப் போக்கி வருகின்றது.

(i) முல்லைக் கொடியின் துயர் நீக்க தேர் ஈந்தவர் யார் ?

(ii) 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று கூறியவர் யார் ?

(iii) சத்திய தருமசாலை எங்கு நிறுவப்பட்டது ?

(iv) யார் யாரையெல்லாம் கண்டு உயிர் இளைத்தார் வள்ளற்பெருமான் ?

(v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : **2x8=16**

**47.** (அ) குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்து எழுதுக.

அல்லது

(ஆ) பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**48.** (அ) அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார் ?

அல்லது

(ஆ) தொழில் கல்வி, தொழில் நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக.

### பகுதி - 2

**49.** செய்யுள் வடிவில் விடை தருக : **2+2+3+3=10**

(அ) 'ஒழுக்கம்' எனத் தொடங்கும் குறள்.

(ஆ) 'வினை' - என முடியும் குறள்.

(இ) 'துன்புளதெனின்' - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

(ஈ) 'இன்று தொட்டிவண்' - எனத் தொடங்கும் சீறாப்புராணப் பாடல்.

- o 0 o -